அவர் மீது நம்பிக்கை உண்டு. (கூச்சல்— குழப்பம்) இந்த மாதிரிப் பேசக் கூடாது. மரியாதையாகப் பேச வேண்டும். (கூச்சல் — குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். சிங்காரம், பேச்சை முடியுங்கள்.

திரு. இரா. சிங்காரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இறுதியாக, கடந்த 17-12-1990 ஆம் நாள் அன்று முத்துப்பேட்டை கோயிலூரில் ஒரு தகராறு நடைபெற்றது. அதை விசாரிக்கச் சென்ற நிருபர்கள் தினமலர் நிருபர், தினந்தந்தி நிருபர் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு நியாயம் தானா? என்பதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். அதே நேரத்தில், தமிழகத்தில் தினமலர் உண்மைக்குப் புறம்பாக எழுதியதாகச் சொல்லி பொய் வழக்கு போடப்பட்டிருக்கிறது. ஜூனியர் விகடன் மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. தராசு மீது வழக்குப் போடப்பட்டு இருக்கிறது. மதுரையிலே இருக்கின்ற தினமணி மீது வழக்குப் போடப்பட்டிருக்கிறது. ஜனநாயகத்திற்கு மாறாக இந்த அரசு நடந்து கொண்டிருக்கிற காரணத்தால் தயவு செய்து மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன், திராவிட முன்னேற்றக் கழக அரசை உடனடியாக டிஸ்மிஸ் செய்து (கூச்சல் — குழப்பம்) மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

13-05 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (22-1-1991) 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 13.06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

70. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 7-5-1990 ஆம் நாளிட்ட 272 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

71. சென்னை கிரிமால்டஸ் ரெபிரள் மருத்துவமனை மற்றும் தொழுநோய் நிலையத்திற்கு சொந்தமான 8 மோட்டார் வண்டிகளுக்கு சலுகை வீத வரி குறித்து உள் (போ.அ.) துறையின்

1991 சனவரி 21]

26—7—1990 ஆம் நாளிட்ட 1755 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

72. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 9—7—90 ஆம் நாளிட்ட 657 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு வட்டிக்கு கடன் கொடுப்பவர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

73. தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு வடிசாலை விதிகளில் ஒரு திருத்தம் செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 10—5—90 ஆம் நாளிட்ட 540 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.)

74. பிராணிகள் வதை தடுப்புச் சங்கம், திருவாளர்கள் சென்சூரி மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் —இடமிருந்து மோட்டார் வண்டி வாங்குவதற்கு விற்பனை வரி விலக்கு அளித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—10—90 ஆம் நாளிட்ட 587 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

75. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1987-88 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47 (2)பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.) (தமிழ் மற்றும் ஆங்கிலம்].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

13. தமிழ்நாடு விழிப்புப் பணிக்குழுவின் 1—4—1987 முதல் 31—3—1988 வரையிலான இருபத்தி மூன்றாவது ஆண்டறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

14. சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரியத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டு அறிக்கை (தமிழ் மற்றும் ஆங்கிலம்).